முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி
O.S.No. 367/ 2025

2026 வது ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ம் நாள் பி.வா.சா.2 ன் சாட்சிய வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது (பிரிவின் ஏற்பாட்டின் படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர்	திருமதி. மைதீன் பாத்து	வட்டம்	பாளையங்கோட்டை
க.பெ /த.பெ	திரு. முகம்மது ஷேக் முகைதீன்	கிராமம்	மேலப்பாளையம்
வயது	47		

22.04.2026 முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் 3–ம் தரப்பினர் ஆவேன். எனது முதல் விசாரணைக்கான சாட்சியத்தை நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டவை தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

(1–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை)

1. எனது நிருபண வாக்குமூலத்தில் ஷபீக் என் மகன் தான் என்று காட்டுவதற்கு எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் விருப்பத்தின் பேரில் தான் ஷபீக் என்பவரை சித்தி பௌஷியா மற்றும் இறந்து போன அய்யூப்கான் ஆகியோருக்கு தத்து கொடுத்ததற்கான எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான்.
2. எனக்கும் எனது கணவருக்கும் ஷபீக் என்பவர் பிறந்தார் என்பதை காட்ட எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான். ஷபீக் என்பவரின் பிறப்பு சான்றிதழில் எனது பெயரோ எனது கணவர் பெயரோ இல்லை என்றால் சரிதான். நான் ஷபீக் என்பவர் கருவுற்று இருந்த போது எனக்கு மருத்துவமனையில் வழங்கப்படும் மகப்பேறு அட்டையில் எனது பெயரும் எனது கணவர் பெயரும் தான் இருக்கும் என்றும் வேறு யாரு பெயரும் இருக்காது என்றால் சரியல்ல.
3. ஷபீக் என்பவரின் பிறப்பு சான்றிதழ் வழக்கிற்காக போலியாக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. ஷபீக் என்பவரின் பிறப்பு சான்றிதழ்

உண்மையா என்பதை கண்டறிய ஜீட் நர்சிங் ஹோம் சேர்ந்த மருத்துவர் மற்றும் அலுவலர்களை விசாரித்தால் தான் உண்மை தெரியும் என்றால் சரிதான். ஷபீக் என்பவர் எனக்கு பிறக்கவில்லை என்றால் சரியல்ல. ஷிபீக் எனக்கு பிறந்து இருந்ததால் அதற்று உரிய சான்றிதழ் தாக்கல் செய்திருப்பேன் என்றும் ஷபீக் என்பவரை அய்யூப்கான் மற்றும் சித்தி பௌஷியா தத்தெடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4. ஷபீக் என்பவரை தத்து கொடுத்தற்கான எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்பதால் எனது சாட்சியம் ஏற்றுக் கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல. 16.11.2010 ம் தேதி ஷபீக் பிறந்ததாக நான் தத்து கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அய்யூப்கான் என்பவர் 13.09.2011 ம் தேதி சித்தி பௌஷியா என்பவருக்கு ஒரு சொத்தை எழுதி கொடுத்துள்ளார் என்றும் அய்யூப்கான் ஷபீக் என்பவரை தத்து எடுத்திருந்தால் ஷபீக் பெயரும் சேர்த்து மேற்படி ஆவணத்தில் சொத்தை எழுதிக் கொடுத்திருப்பார் என்றால் சரியல்ல.

5. இந்த வழக்கிற்கும் ஷபீக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், அய்யூப்கான் என்பவருக்கு சித்தி பௌஷியா, தஸ்லீமா, முர்ஷிதா ஆகியோர்கள் மட்டும் தான் வாரிசு என்றும் ஷபீக் வாரிசு கிடையாது என்று சொன்னால் சரியல்ல. நான் 1–ம் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று சொன்னதால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது)

MARIMUTHU R MUNIYASAMY

Deposition uploaded on 22.04.2026
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.04.22 16:54:42 +0530

Principal District Munsif,
Tirunelveli.